பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

30 ] சென்னை—ஞாயிறு, நவம்பர் 3, 1946. [ விலை. அணா. 2

## சென்னை கதர்த் திட்டம்

மகாத்மா காந்தி அக்டோபர் 21-ம்தேதி அமரிக்கப் பத்திரிகை நிருபர் திரு. பிரஸ்டன் க்ரோவர் என்பவர்க்குக் பேட்டி அளித்தபோது,

திரு. க்ரோவர்:—சென்னை சர்க்கார் கதர் அபிவிருத்தியின் பொருட்டு அங்குள்ள மில் தொழில் விருத்தியைத் தடை செய்யத் தீர்மானித்திருக்கிறார்களே, தங்கள் கருத்து யாது?

காந்தியடிகள் :—அது மிகவும் நல்ல விஷயமாகத் தோன்றுகிறது. தர்க்க ரீதியாகப்பார்த்தால் பரிபூரணமாகச் செய்ய வேண்டியது தான்.

திரு. க்ரோவர் :—அப்படியானால் இப்பொழுதுள்ள மில்களையும் நிறுத்திவிட வேண்டுமல்லவா?

காந்தியடிகள் :—கதரை அபிவிருத்தி செய்து கொண்டு போனால் காலக்கிரமத்தில் மில் துணி வாங்குவதற்கு ஆளில்லாமல் போகும். அப்பொழுது மில் துணி உற்பத்தி செய்கிறவர்கள் அதை விட்டு விடுவார்கள். அல்லது அதை இந்தியாவுக்கு வெளியே கொண்டுபோய் விற்பார்கள்.

## கிழக்கு வங்காள நிலைமை

திரு. க்ரோவர் கிழக்கு வங்காள நிலைமையைப் பற்றிக் கேட்டார். அப்பொழுது,

காந்தியடிகள் :—வங்காளத்திலுள்ள முஸ்லிம் லீக் சபை இந்த அட்டூழியங்களை அடக்க விரும்பினால் அதனால் அப்படிச் செய்ய முடியுமென்று எண்ணுகிறேன். முஸ்லீம் ஓட்டர்களில் பெரும்பான்மையோர் அவர்கள் பக்கத்தில் இருக்கிறார்களல்லவா?

வங்காளத்தில் நடக்கும் அட்டூழியங்கள் இருதயத்தை வெடிக்கச்செய்யக் கூடியனவாக இருக்கின்றன.

அக்டோபர் 23-ம் தேதி பண்டித நேரு வருகிறார். அப்பொழுத முஸ்லீம் லீகர்கள் மந்திரிசபைக்குள் வந்திருப்பதைக் குறித்து காங்கிரஸ் காரியக்கமிட்டியார் ஆலோசனை செய்வார்கள். அதன்பின் வங்காளத்துக்குப் போய் வர எண்ணி யிருக்கிறேன். அங்கே போனால் தான் எனக்குத் திருப்தியுண்டாகும். அங்கே போவதால் ஏதேனும் நன்மையுண்டானாலும் உண்டாகலாம்.

திரு. க்ரோவர் :—உங்கள் சொல்லுக்கு முஸ்லீம்கள் செவி சாய்ப்பார்களா?

காந்தியடிகள்:—அது எனக்குத் தெரியாது. அப்படி எதிர்பார்த்துக் கொண்டு நான் போகவில்லை. ஆனால் அப்படி எதிர் பார்க்க எனக்கு உரிமையுண்டு. கடமையைச் செய்யப் போகிறவன் கடமையைச் செய்வதற்காகக் கடவுள் பலம் அருள வேண்டும் என்று மட்டுமே எதிர்பார்ப்பான்.

திரு. க்ரோவர்:—இந்த மாதிரி குழப்பங்கள் எந்தக் காலத்தில் இந்தியாவில் இல்லாமல் ஒழியும்?

காந்தியடிகள்:—அவைகள் ஒழிந்து விடும். அதில் சந்தேகமில்லை. பிரிட்டிஷாரில்லாம லிருந்தால் அதி சீக்கிரத்தில் ஒழிந்து போகும். பிரிட்டிஷார் இருந்தால் இரண்டு கட்சியாரும் பிரிட்டிஷாருடைய உதவியை நாடுகிறார்கள். அதை நான் வருத்தத்துடன் ஒப்புக்கொள்கிறேன்.

## இடைக்கால சர்க்கார்

இடைக்கால சர்க்காரில் சேர்ந்துள்ள முஸ்லிம் லீக் மந்திரி, ராஜா கஜனபர் அலிகான் முஸ்லிம் லீக் பாக்கிஸ்தானுக்காகப் போராடவே இடைக்கால சர்க்காரில் சேருகிறது. என்று கூறியிருப்பதைக் குறித்து திரு. க்ரோவர் காந்தியடிகளிடம் கேட்டார். காந்தியடிகள்:—அது எதிர்பாராததும் முரண்பாடுள்ளதுமான கருத்தாகும். இடைக்கால சர்க்கார் இடைக்காலத்துக்கு மட்டுமே ஏற்பட்டது. நீண்ட காலத்துக்கு நடைபெறாது. அது ஏற்பட்டிருப்பது தேசத்தில் காணப்படும் பட்டினி, நிர்வாணம், பிணி, லஞ்சம், படிப்பின்மை, போக்குவரத்து வசதியின்மை ஆகியவைகளைப் போக்கு வதற்காகவே ஆகும். இந்தியாவிலுள்ள சிறந்த அறிவாளிகளுடையத் திறமையைச் சோதிக்க இந்தப்பிரச்னைகளில் ஏதேனும் ஒன்று கூடப் போதும். இந்த விஷயங்களில் ஹிந்து முஸ்லிம் வித்தியாசத்துக்கு இடமே இல்லை. ஹிந்து முஸ்லிம் இருவரும் ஒருப்போலவே உடையில்லாமலும் உணவில்லாமலும் கஷ்டப்படுகிறார்கள். இரண்டு கக்ஷியாரையும் ஒரே மாதிரியாக எழுத்தறிவின்மை என்னும் பேயும் இந்தியப் பண்பாட்டுக்கு விரோதமான கல்வி முறையும் ஆட்கொண்டிருக்கின்றன. இடைக்கால சர்க்கார் போய் அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தும் சர்க்கார் ஏற்படுவதற்கு அதிகக்கால மில்லை. அரசியல் நிர்ணய சபை வேலையைத் துரிதப் படுத்து வதற்கு இரண்டு கக்ஷியாரும் மனம் கொண்டு விட்டால் அந்த சர்க்கார் இன்னும் அதிசீக்கிரத்தில் ஏற்பட்டு விடும். அரசியல் நிர்ணய சபை தூது கோஷ்டியாரின் திட்டப்படி அமைக்கப்படுவதாகும். அந்தத் திட்டம் பாக்கிஸ்தான் கொள்கையை அடியோடி விலக்கி யிருக்கிறது. அதற்குப் பதிலாகத் தொகுதி முறையைச் சிபார்சு செய்திருக்கிறார்கள். அந்த முறைக்குக் காங்கிரஸும் லீகும் தூது கோஷ்டியும் வேறு வேறு விதமாக வியாக்கியானம் செய்கிறார்கள். சட்டம் செய்கிறவர் தான் செய்யும் சட்டத்துக்கு வியாக்கியானம் செய்ய முடியாது. வியாக்கியானத்தைப் பற்றி விவாதம் எழுந்தால் நியாய மன்றந் தான் அதைத் தீர்மானிக்க வேண்டும்.

திரு. க்ரோவர் :—முஸ்லிம் லீக் நியாயமன்றத்தின் வியாக்கியானத்தை ஏற்றுக்கொள்ளா விட்டாலோ?

காந்தியடிகள் :—அவர்கள் தங்கள் வியாக்கியா

னத்தை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. அப்படிச் செய்தால் அவர்கள் தவறு செய்கிறவர்களாவார்கள். அப்பொழுது அடிதடிதான் நேரும். நாமெல்லோரும் காட்டு மிராண்டிகளாயிருக்கிறோம். அபிப்பிராய வித்தியாசம் ஏற்பட்டால் சண்டைபோட ஆரம்பித்து விடுகிறோம். ஆனாலும் நாம் கௌரவமாகவே நடந்து கொள்ளுகிறோம். அமெரிக்காவிலும் அப்படித்தான் ஐரோப்பாவிலும் அப்படித்தான்.

### பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் நிலைமை

*திரு. க்ரோவர்:—இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களுடைய நிலைமை யாது?*

காந்தியடிகள்:—இந்தியாவுக்கு விஸ்வாஸமானவராகவும் இந்திய நிலைமைக்கு ஒத்தவராகவும் லஞ்சத்துக்கு இடந்தராதவராகவுமுள்ள உத்தியோகஸ்தர் அனைவர்க்கும் இங்கு இடமுண்டு. அதனால் அவர்கள் இங்கிலாந்துக்கு விஸ்வாஸத் துரோகம் செய்ய வேண்டும் என்று கூறவில்லை. இந்தியாவுக்கு விஸ்வாஸ துரோகமாக நடக்கக்கூடாது என்று மட்டுமே கூறுகிறேன். இரண்டுக்கும் முரண்பாடு இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் முரண்பாடு ஏற்பட்டே வந்திருக்கிறது. அநேகர் இந்தியாவைக் கெடுத்துத் தங்கள் தாய்நாட்டுக்கு நன்மை தேடும் எண்ணத்துடனேயே இங்கு வருகிறார்கள். அது ஏமாற்றாகும். அது யோக்கியமான காரியமில்லை. எந்த வேலையிலும் ஏமாற்றுவதற்கு இடங்கிடையாது.

### அமெரிக்காவுக்கு ஒரு செய்தி

திரு. க்ரோவர் அமெரிக்காவுக்கு ஒரு செய்தி கூற வேண்டுமென்று கேட்டபொழுது காந்தியடிகள் கூறியதாவது:—

உங்கள் தேசத்தில் அரியாசனத்தில் வீற்றிருக்கும் பணம் என்னும் சத்தானை கீழே இறக்கிவிட்டு ஏழையான கடவுளை ஏற்றி வையுங்கள். அமெரிக்கா பெரிய பெரிய காரியங்களைச் செய்ய முடியும். ஆனால் சாத்தானை வழிபட்டு வந்தால் எதிர்காலத்தில் இழிநிலையே அடையும். சாத்தான் இறுதிவரை யாருக்கும் நண்பனாக யிருந்ததாக இதுவரைக் கேள்விப்பட்டதில்லை. அவன் எந்தக் காலத்திலும் ஏமாற்றுகிற நண்பனாகவே யிருந்து வருகிறான்.

### கிராமத்துக்கு வேண்டிய துணியை கிராமத்திலேயே உற்பத்தி செய்வதெப்படி?

திரு. மனு சுபதார் கிராமங்களுக்கு வேண்டிய துணியை கிராமத்திலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கு ஒரு திட்டம் வகுத்து எனக்கு எழுதியிருந்தார். நான் 4-8-46 ஹரிஜனில் அதன் சுருக்கத்தைத் தந்தேன். இப்பொழுது அவர் தம்முடைய திட்டத்தை ஆதரித்து ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அந்தச் சுவை மிகுந்த கட்டுரையிலிருந்து விஷயத்துக்குப் பொருத்தமான இரண்டு பகுதிகளைக் கீழே தருகின்றேன்:—

"நம்முடைய நாட்டில் கைராட்டினமானது ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஒவ்வொரு வீட்டிலும் இருந்து வந்தது. அதை மறுபடியும் நம்முடைய வீடுகளில் இருக்கும்படி செய்வது ஒரு சந்தோஷமான காரியம் என்பதில் சந்தேகம் இல்லை. அத்துடன் கைராட்டினத்தைக் கைக்கொள்வதால் ஆத்மிக நன்மையும் உண்டு. ஆனால் நான் இந்தக் காரணங்களுக்காக என்னுடைய திட்டத்தை சிபார்சு செய்யவில்லை. கிராமங்களிலுள்ள ஜனங்களுக்குத் துணி கொடுக்க வேண்டும் என்ற பொருளாதாரக் காரணத்தைக் கொண்டுதான் சிபார்சு செய்கிறேன். கடவுள் அவர்களுக்குத் திறமையை அளித்திருக்கிறார். நாம் அவர்களுக்குப் பருத்தியைக் கொண்டு போய்க் கொடுத்தால் அவர்கள் ஒரு வார காலத்துக்குள் நூல் நூற்கக் கற்றுக் கொண்டு விடுவார்கள், அப்பொழுது அவர்கள் உற்பத்தி செய்யும் துணி கள்ள மார்க்கெட்டில் விற்கும் துணியை விட மலிவாயிருக்கும். அது மட்டுமில்லை. மில் துணிகளை விடக் கூட மலிவாயிருக்கும். ஏனெனில் மில் துணி விலையில் சேர்ந்துள்ள அநேக செலவுகள் அவர்கள் நூல் உற்பத்தி செய்வதில் கிடையா. இந்தச் செலவுகள் வருமாறு: மில் முதலாளியின் லாபம், விநியோகிக்கும் தாகர்களுடைய லாபம், பருத்தியையும் துணியையும் கொண்டு போவதற்குள்ள வண்டிச் சத்தம், கண்காணிப்புச் செலவு, வட்டி, தேய்மானம். ஆனால் கையால் நூற்று நெய்தால் நூற்கும் வரை கூலி கொடுக்க வேண்டியதில்லை. நெய்வதற்குக் கூலி தானியமாகக் கொடுக்கலாம். ஆகலால் சாதாரணமான காலங்களில் இப்படி உற்பத்தி செய்யும் துணி மில் துணியைவிட மலிவாகவே யிருக்கும். இந்தியாவைப் போன்ற ஏழை தேசத்துக்குத் தேவையானது வேலையை மிச்சப்படுத்தும் யந்திரங்களல்ல. முதலையும் லாபத்தையும் மிச்சப்படுத்தும் தந்திரங்களேயாகும். இந்தத் தந்திரங்களைத் தான் நான் என்னுடைய திட்டத்தில் கூறியிருக்கிறேன். என்னுடைய திட்டத்தில் கிராம பஞ்சாயத்தார் மேற்பார்வையில் ஒத்துழைக்கும் முறையும் சுயாட்சி முறையும் நடைபெறும். வெளியாருடைய தலையீடு எதுவுமிருக்க மாட்டாது, எந்தப் பொருளாதாரப் புரட்சியை நாம் நாட்டில் ஏற்படுத்த எண்ணுகிறோமோ அதற்கான விதை என்னுடைய திட்டத்தில் காணப்படும். உங்களையும் என்னையும் போன்ற லட்சக் கணக்கான மக்கள் வருஷ முழுவதும் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வுத் தரம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டு போகிறது. அதற்கான காரணங்களை அவர்கள் அறிய மாட்டார்கள். தானம் செய்வதன் மூலம் அவர்களுடைய துன்பங்களைக் குறைக்கலாம். ஆனால் அப்படிச் செய்வது அவர்களைப் பாப்பராக்கி விடும். அவர்களுடைய சுயமரியாதையும் போய் விடும். தாங்கள் வேலை செய்து சம்பாதிக்கிறோம் என்ற உணர்ச்சி என்னுடைய திட்டத்தை மேற்கொண்டால் தான் உண்டாகும். என்னுடைய திட்டத்தைக் கண்டு அவர்கள் வருந்தமாட்டார்கள். சர்க்கார் ஜன சமூகத்திலுள்ள மற்றப் பகுதிகளுக்குச் செய்யும் உதவியைவிட மிகக் குறைந்த அளவே இவர்களுக்குச் செய்ய வேண்டியிருக்கும். இந்தத் திட்டத்தினாலேற்படும் மற்றொரு நன்மை யாதெனில் அது பிறர் உதவியின்றி தானே இயங்கும் என்பதேயாகும். சில கிராமங்களில் அது சீக்கிரமாக வேர் போட்டுவிடும். ஒரு மாதத்தில் ஒரு பேல் பருத்தியை நூற்று விடுவார்கள். சில கிராமங்களில் மூன்று நான்கு மாதங்கள் செல்லலாம். சில கிராமங்களில் இரண்டொரு மாதங்களிலேயே தங்களுக்கு வேண்டிய துணியைத் தயாரித்து விடுவார்கள். சில கிராமங்களில் வேண்டிய அளவுக்கு அதிகமாகவும் தயாரித்து விடுவார்கள். அப்படி அதிகப்படியாக தயார் செய்யப்படும் துணியைப் பெரிய நகரங்களுக்குக் கொண்டு போய் விற்பதில் தவறு இல்லை என்றே எண்ணுகிறேன். ஆனால் ஒரு எச்சரிக்கை. அதிகமாக உற்பத்தி யாகும் துணியை யாரேனும் ஒருவர் வாங்கிவிற்க இடம் தரலாகாது. கிராமத்தாரே வாங்கவேண்டும். கிராமத்தில் பருத்தியைக் கொண்டு போய்க் கொடுக்கும் சர்க்காரே துணியை பட்டணங்களுக்குக் கொண்டுபோய் விற்கவேண்டும். எந்த விஷயத்திலும் தரகருக்கு இடம் கொடுக்கலாகாது. நம்முடைய நாட்டிலிருந்த அநேக நல்ல கைத்தொழில்கள் தரகர்களினாலேயே அழிந்து போயின."

திரு. சுபதார் மற்றொரு கடிதத்தில் எழுதுகிறார்:—

“ என்னுடைய திட்டம் ஏற்றுக்கொள்ளப் படாவிட்டால் நம்முடைய பெண்கள் உடுத்தத் துணியில்லாமல் அம்மணமாக வீட்டுக்குள்ளேயே யிருக்கவேண்டிய துர்பாக்கிய நிலைமை ஏற்படும். மில் முதலாளிகளும் தரகர்களும் காட்டிவரும் கல் நெஞ்சைப் போக்குவதற்கு இந்தப் பரிகாரம்தான் உடனடியாக வேண்டியதாகும். உப்பு வரியை நீக்கி விட்டால் அரசாங்க அதிகாரம் ஜனங்களிடம் வந்து விட்டதாகக் கிராமவாசிகள் எளிதி லறிந்து கொள்வார்கள் என்று நீங்கள் சரியாகச் சொல்லி இருக்கிறீர்கள். அதுபோல் சர்க்கார் அவர்களுக்குப் பருத்தி கொண்டுபோய்க் கொடுத்து அதன் மூலம் சுலபமாக தங்களுக்கு வேண்டிய துணியை நெய்து கொள்ளக் கூடுமானாலும், அந்த உண்மையை அறிந்து கொள்வார்களல்லவா ? ”

புது தில்லி, — 23.10.46 — மோ. க. காந்தி.

## சத்யார்த்தப் பிரகாஷுக்கு சிந்து சர்க்கார் தடை

சத்யார்த்தப் பிரகாஷ் என்னும் நூலின் மீது சிந்து சர்க்கார் விதித்திருந்த தடையுத்தரவு காலாவதியாகி விட்டது என்றும், இனி எந்தக் காலத்திலும் புதுப்பிக்கப்பட மாட்டாது என்றும் எண்ணியிருந்தோம். அது ஏமாற்றமாகவே முடிந்தது. புதிதாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கும தடை யுத்தரவு வருமாறு :—

“ சத்யார்த்தப் பிரகாஷ் என்னும் பெயருடன் ஸிந்தி பாஷையில் வெளியாயிருக்கும் புஸ்தகத்தின் 14-வது அத்தியாயத்திலுள்ள விஷயம் சக்கரவர்த்தியின் பிரஜைகளுக்கிடையில் பகைமையும் துவேஷமும்உண்டாக்கக் கூடியதாக யிருப்பதாக சிந்து சர்க்காருக்குத் தோன்றுவதால் சிந்து சர்க்கார் சுவாமி தயானந்த சரஸ்வதி எழுதிய சத்யார்த்தப் பிரகாஷ் என்னும் நூலை கராச்சி பிரதிநிதி சபையின் சார்பாக ஆசிரியர் டாராசந்த் டி. கஜரா எம். ஏ., ஸிந்தி பாஷையில் வெளியிட்டிருக்கும் புஸ்தகத்தின் பிரதிகளை எல்லாம் பறிமுதல் செய்கிறார்கள். அதற்கான காரணங்கள் இவை:—

(1) புஸ்தகத்தின் ஆசிரியர்! முஸ்லிம்களுடைய மதக் கொள்கைகளைக் கேலி பண்ணுகிறார்.

(2) குர்ஆன் போதனைகளைத் தப்பாகச் சொல்லி ஏசுகிறார்.

(3) தீர்க்கதரிசி மகமதின் செல்வாக்கைக் குறைக்கப் பார்க்கிறார்.

(4) முஸ்லிம்களுடைய மத உணர்ச்சிகளைப் புண்படுத்தக் கூடியதாகவும் புண்படுத்துவதாகவும் இருக்கிறது ”

**என் கருத்து :—**

இந்த உத்தரவு முன்னிலும் அதிகமாக பாதிக்கக் கூடியதாக இருக்கிறது. முன்னால் போட்டிருந்த தடையுத்தரவு 14-வது அத்தியாயத்துடன் புஸ்தகத்தை அச்சிடவோ வெளியிடவோ செய்தால் குற்றம் என்றே சொல்லிற்று, ஆனால் இப்போது புதிப்பித்திருக்கும் தடையுத்தரவு அத்தகைய புஸ்தகத்தை வைத்திருப்பதுகூட தவறென்று கூறுகிறது. இந்த உத்தரவு அர்த்தமில்லாதது என்றும் உலகத்திலுள்ள ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்களுடைய மனத்தைப் புண்படுத்த எண்ணியதாக இருக்கிறதென்றும் நான் எண்ணவேண்டியிருக்கிறது. வேறு விதமாக எண்ணமுடியவில்லை. முஸ்லிம்களிடையே குரானும், கிறிஸ்தவர்களிடையே பைபிளும் எந்த ஸ்தானத்தை வகித்து வருகின்றனவோ அதே ஸ்தானத்தைச் சத்யார்த்தப் பிரகாஷ் ஆரியசமாஜத்திடையே வஹித்து வருகின்றது. தற்கால விஷயமாகவும் தர்க்கத்துக்கு இடமான விஷயமாகவுமிருக்கும் நூல்களை சர்க்கார் தடுத்தால் அதற்கு அர்த்தமுண்டு. இந்தக் காலத்தில் ஜன ஆதரவுள்ள சர்க்கார்கள் தங்களதிகாரத்தை அந்த விதமாக உபயோகிக்கக் கூடத் தயங்குகிறார்கள். வேத புஸ்தகத்துக்குத் தடையுத்தரவு போடுவது அக்கிரமமென்றே எனக்குத் தோன்றுகிறது. ஆதலால் சிந்து சர்க்கார் தடையுத்தரவை நீக்கிவிட வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகின்றேன். சத்யார்த்தப் பிரகாஷின் ஸிந்தி மொழி பெயர்ப்பு புது வெளியீடன்று. சத்யார்த்த பிரகாஷ் எத்தனையோ பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. உலகத்திலுள்ள அநேக பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட புஸ்தகத்தில் சக்கரவர்த்தியின் பிரஜைகளிடையே பகைமையோ துவேஷமோ உண்டாக்கக் கூடிய விஷயமிருப்பதாக இப்பொழுதுதான் கண்டுபிடிக்கப்படுகிறதா ? மத விஷயங்களில் சகிப்புத் தன்மை எவ்வளவு காட்டினாலும் அதிகமென்று சொல்லிவிட முடியாது. எந்தக் காலத்திலும் மத வித்தியாசங்கள் இருந்து கொண்டுதானிருக்கும். வேறு வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள் நண்பர்களாக வசிக்க வேண்டுமானால் சகிப்புத் தன்மை ஒன்றே அதற்குரிய வழியாகும். மதமானது எந்த விதமாக தோஷம் கற்பித்தாலும் கெட்டுப்போய்விட மாட்டாது. மதத்துக்குக் கேடுண்டாவது அந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் அலட்சிய புத்தியுடையவர்களாகவோ சரியாக அனுஷ்டிக்காதவர்களாகவோ இருந்தால்தான் ஏற்படும்.

புது தில்லி, — 27-10-46 — மோ. க. காந்தி.

## பலாத்காரமாகக் கடத்திச்செல்லப்பட்ட பெண்கள்

கேள்வி :—பலாத்காரமாகக் கடத்திச் செல்லப்பட்ட பெண்கள் தவறு செய்தவர்கள் ஆகமாட்டார்கள் என்றும், சமூகத்தார் அவர்களைத் தண்டித்தால் தவறு செய்தவர்களாவார்கள் என்றும் நீங்கள் கூறியிருக்கிறீர்கள். பெண்களை பலாத்காரமாகக் கல்யாணம் செய்து வைப்பதாக ஒரு சடங்கை நடத்தி வைத்தால் அந்தப் பெண்கள் அதற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமா ? சமூகத்தாரும் குடும்பத்தாரும் அவர்களைத் திரும்பச் சேர்த்துக்கொள்வது சரியான காரியமல்லவா ? கல்யாணமாகாத பெண்களைக் கடத்திக் கொண்டு போனாலும் கட்டாயப்படுத்திக் கல்யாணம் செய்துவைத்தாலும் அவர்களைத் திரும்பச் சேர்த்துக் கொள்வதோடு அவர்களுக்கு நியாயமான முறையில் கல்யாணம் செய்து வைத்து அவர்களுக்கு ஏற்பட்ட மாசைத் துடைப்பதற்கு விசேஷமாக முயல வேண்டாமா ?

பதில் :—நீங்கள் கூறுவது முற்றிலும் சரி. நீங்கள் சொல்வது முழுவதும் நான் முன்னால் சொன்னதிலேயே அடங்கி யிருக்கின்றது. பலாத்காரமாக கடத்திச் செல்லப்பட்ட பெண்கள் எவ்விதக் குற்றமும் செய்யவில்லை என்பதிலும் எவ்வித இழிவும் ஏற்படவில்லை என்பதிலும் எனக்கு சந்தேகமில்லை. நியாயபுத்தியுள்ள ஒவ்வொருவரும் அவர்களிடம் கருணை காட்டவும் அவர்களுக்கு உதவி செய்யவும் வேண்டும். அத்தகைய பெண்களை சந்தோஷமாக வீட்டில் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குத் தக்க வரன்கள் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும்.

புது தில்லி, — 24-10-46 — மோ. க. காந்தி.

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: பொ. திருகூடசுந்தரம், நாமக்கல் கவிஞர்

நவம்பர் 3 ஞாயிறு 1946


## ஒரு நல்ல காரியம்

பம்பாய் சட்டசபையில் தீண்டாமை விலக்குச் சட்டம் ஒன்று நிறைவேறியிருக்கிறது. அதன் பிரதியொன்று சட்டசபை மெம்பர் திரு. ஜி. டி. தபஸே எனக்கு அனுப்பியிருக்கிறார்.

அதிலுள்ள முக்கியமான பகுதிகள் வருமாறு :—

1. ஹரிஜன் என்பதற்காக எந்த ஹரிஜனையும் சட்டப்படி ஏற்பட்ட எந்த ஸ்தாபனத்திலும் வேலைக்கு எடுத்துக் கொள்ள மறுத்தலாகாது.

2. அது போலவே பிறர் உபயோகிக்கும் நீர்நிலைகளையும் சுடுகாடு இடுகாடுகளையும் ரோடுகளையும் கக்கூசு முதலியவைகளையும் உபயோகிக்க வொட்டாமல் தடுத்தலாகாது.

3. வாடகைக்கு விட சர்க்காரோ முனிசிபல் சபையோ அனுமதி அளித்துள்ள வண்டிகளில் ஏறுவதையும் தடுத்தலாகாது.

4. சர்க்காரோ முனிசிபல் சபையோ நடத்திவரும் சத்திரங்கள் போன்ற தர்ம ஸ்தாபனங்களை உபயோகப்படுத்துவதையும் தடுத்தலாகாது.

5. பொதுஜன பொழுது போக்கு இடத்தையும் விநோத இடத்தையும் உபயோகிப்பதையும் தடுத்தலாகாது.

6. மற்ற இந்துக்கள் உபயோகிக்க உரிமை பெற்றுள்ள எந்தக் கடைக்கு வருவதையும் தடுத்தலாகாது.

7. பொதுவாக சகல இந்துக்களும் உபயோகிக்க உரிமை பெற்றுள்ள சகல இடங்களையும் உபயோகிப்பதையும் தடுத்தலாகாது.

8. பொதுவாக சகல இந்துக்களுடைய நன்மையை உத்தேசித்து ஏற்படுத்தப்பட்டிருக்கும் எந்த தர்ம சகாய நிதியிலும் உதவி பெறுவதையும் தடுத்தலாகாது.

9. மேற்கூறிய கட்டடங்களையும் வண்டிகளையும் கவனித்துக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டவர்கள் ஹரிஜன் என்று இழிவான முறையில் நடத்தலாகாது.

10. ஹரிஜன் என்ற காரணத்தை மட்டும் கொண்டு எந்தக் கோர்ட்டும் ஹரிஜனங்களுக்குப் பாதகமாக எந்தத் தீர்ப்பும் செய்யலாகாது.

11. அது போலவே ஸ்தல ஸ்தாபனங்களும் நடத்தலாகாது.

12. மேற்கூறிய விதங்களில் தடை செய்வோர் மூன்று மாத தண்டனையோ ரூ. 200 வரையுள்ள அபராதமோ அல்லது இரண்டுமோ பெறுவார்கள்.

13. மேற்கண்டவாறு தண்டனை பெற்றவர், மறுபடியும் அதே குற்றத்தைச் செய்தால் 6 மாத சிறைவாசமோ அல்லது 500 ரூ. வரை அபராதமோ அல்லது இரண்டுமோ பெறுவார்.

14, மூன்றாவது முறையும் அதற்குப் பிறகும் குற்றம் செய்தால் ஒரு வருஷ சிறைவாசமும் ரூ. 1000 வரை அபராதமும் பெறுவார்.

இந்தச் சட்டத்தைத் தயாரித்தவர் தாம் சட்டசபையில் நிகழ்த்திய பிரசங்கத்தின் நகல் ஒன்று எனக்கு அனுப்பி வைத்தார். அதிலுள்ள முக்கியமான பகுதிகளைக் கீழே தருகின்றேன் :—

"இந்தத் தீண்டாமை வழக்கம் அறிவுக்குக் கொஞ்சமும் பொருத்தமானதன்று. ஹரிஜன் பிறந்ததும் அவனிடம் வந்து சேர்ந்து விடுகிறது தீண்டாமை. ஹரிஜனாகப் பிறப்பவன் ஹரிஜனாகவே வாழ்ந்து ஹரிஜனாகவே இறக்கின்றான். அவன் எவ்வளவு சுத்தமாயிருந்தாலும் எவ்வளவு அறிவு படைத்திருந்தாலும் உயர்ந்த குணமுடையவனாக இருந்தாலும் வைதீக இந்துக்கள் என்று சொல்லிக் கொள்வோர் அவனை இழிவாகவே கருதுகிறார்கள். இதில் மிகவும் வருந்தத் தக்க விஷயம் யாதெனில் ஹரிஜன் இறந்த பிறகு கூட அவனுடைய அஸ்தியை மற்றவர்களுடைய அஸ்தியுடன் கலக்க வொட்டாமல் தடுப்பதேயாகும், தீண்டாதாராக ஹிந்துக்கள் மட்டுமே எண்ணுகின்றார்கள் என்பதில்லை. கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் பிறருங்கூட அவ்விதமே எண்ணுகிறார்கள். ஆதலால் இந்தச் சட்டமானது ஹரிஜனங்களுக்கு சமூக விஷயங்களிலும் மூலாதாரமான உரிமைகளிலும் ஓர் சுதந்திர சாஸனமாக இருக்கின்றது."

என் கருத்து :—

ஹிந்து மெம்பர்கள் ஆட்சேபியாமலே இந்தச் சட்டம் நிறைவேறியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். அதுவே சட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வைப்பதற்கான நற்சகுனமாகும். ஆயினும் அந்தச் சட்டத்தால் எல்லாம் கிடைத்துவிடும் என்று எண்ணிவிடலாகாது. நாம் தீர்மானங்களை கரகோஷத்துடன் உத்சாகமாக நிறைவேற்றுவதும் பிறகு அவற்றைக் கண்ணெடுத்துக் கூடப் பார்க்காமல் இருப்பதும் துர்அதிர்ஷ்டவசமாக நம்முடைய நாட்டில் சர்வ சாதாரணமான பழக்கமாக ஆகி வருகின்றது. ஆதலால் சர்க்காரும் சீர்திருத்த வாதிகளும் இது விஷயத்தில் சர்வ ஜாக்கிரதையாக இருந்து சட்டத்தை அணுவளவு கூடப் பிறழாமல் அமல் நடத்த வேண்டியது அவசியமாகும்.

இந்தச் சட்டத்தை வகுத்தவர் கூறிய அறியாமையின் ஆட்சி இன்னும் இந்த நாட்டில் நடந்து கொண்டுதான் இருக்கிறது என்பதை நாம் மறைத்து வைத்துக் கொள்வதில் எவ்வித பயனும் கிடையாது. இந்த அறியாமை ஆட்சி தீண்டாமை விஷயத்தில் மட்டுமின்றி வேறு பல விஷயங்களிலும் நடந்து வருகின்றது. ஆதலால் சீர்திருத்தவாதிகள் அந்தப் பேயை மிகவும் ஜாக்கிரதையாக கவனித்து வரவும் அந்தப் பேய் பிடித்து ஆட்டுவோரிடம் மரியாதையாகவும் சாமர்த்தியமாகவும் நடக்கவும் வேண்டியவர்களாவார்கள்.

புது தில்லி — மோ. க. காந்தி.

## உறுதியாக நிற்றல்

அடுத்த வருஷம் மார்ச் மாதம் ஆங்கில அரசர் ஜார்ஜும் அவருடைய மனைவியாரும் தென் ஆப்பிரிக்காவுக்கு விஜயம் செய்யப் போகிறார்கள். தர்பன் நகரில் அவர்களை வரவேற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக ஒரு கமிட்டி நிறுவப்பட்டிருக்கிறது. அந்த வரவேற்பில் ஐரோப்பியரல்லாத மக்களையும் கருப்பு நிற மக்களையும் கலந்து கொள்ளும்படி செய்வதற்காக அந்தக் கமிட்டி ஒரு சப் கமிட்டியை நியமித்திருக்கிறது. அந்தக் கமிட்டியில் அங்கத்தினராகயிருந்து இந்திய மக்கள் ராஜா ராணியையும் ராஜகுமாரிகளையும் தரிசிப்பதற்கு வேண்டியயோசனையும் உதவியும் அளிப்பதற்காக இரண்டு பிரதிநிதிகளை அனுப்புமாறு நேட்டால் இந்திய காங்கிரஸ் சபையார்க்கு வேண்டுகோள் அனுப்பினார்கள்.

இந்த வேண்டுகோளுக்கு கேட்டால் இந்தியக் காங்கிரஸ் கூட்டுக் கௌரவ காரியதரிசி மீர் சாகேப் கீழ்க்கண்ட உறுதியான பதிலை செப்டம்பர் 11ல அனுப்பி வைத்தார் :—

" இந்திய மக்கள் ராஜ தம்பதிகளிடமும் ராஜகுமாரிகளிடமும் மரியாதை செலுத்திய போதிலும் தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்திய மக்கள் தங்கள் சரித்திரத்தில் அதி நெருக்கடியான ஒரு சந்தர்ப்பத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை ஞாபகப் படுத்தும்படி என்னுடைய நிர்வாக சபையார் கூறுகிறார்கள். சென்ற 50 வருஷ காலமாக எங்களுடைய ஜீவாதாரமான மனித உரிமைகளைப் பறிக்கக் கூடிய சட்டங்கள் இயற்றப்பட்டு வந்து, இப்பொழுது எங்கள் சமூகத்தார் எவ்வளவு சொல்லியும் கேளாமல் இந்திய மக்களை வேறாகப் பிரித்து வைக்கும் இழிவான சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. எங்களுக்கு வோட் உரிமை இல்லை. அப்படி வாயில்லாப் பூச்சிகளாகிய எங்களை அடக்கி ஒடுக்க எண்ணி தென் ஆப்பிரிக்கா அரசாங்கத்தார் செய்துவரும் அதர்மமான செயல் இந்திய மக்கள் அனைவரையும் மிகுந்த சஞ்சலத்துக்குள்ளாக்கி யிருக்கிறது. சமீபத்தில் இயற்றப்பட்ட சட்டங்களின் போக்கைப் பார்க்கும் பொழுது இன்னும் இது மாதிரியே நடைபெறும் என்றே தோன்றுகிறது. இந்த நாட்டில் தோலின் நிறம் ஒன்றை வைத்தே குணங்களை நிச்சயிக்கும் முறை ஏற்பட்டிருக்கின்றது,

இதன் காரணமாக தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்திய மக்கள் இத்தகைய இழிவுபடுத்தும் சட்டங்களை எதிர்க்க சாத்வீக எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பிக்க 1946 ஜூன் 13-ம் தேதி தீர்மானித்தார்கள். இந்தச் சாத்வீக எதிர்ப்பு இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. எங்கள் மக்களில் டாக்டர் யூஸுப் தாது, டாக்டர் ஜி. எம். நாயக்கர் போன்ற தேசியத் தலைவர்கள் உள்பட 627 பேர் சிறைக்கு அனுப்பப்பட்டுளர். அங்கு அவர்கள் சாதாரணக் குற்றவாளிகளைப் போலவே நடத்தப்பட்டு வருகிறார்கள். சிலரை மனிதத் தன்மையற்ற முறையில் நடத்தி யிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் இன்னும் சிறையிலேயே இருக்கிறார்கள். தினந்தோறும் புதிதாகப் பலர் சிறை சென்றும் வருகிறார்கள்.

சக்கரவர்த்தியின் ஆட்சியிலுள்ள சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியிலுள்ள இந்திய சமூகத்தார் இந்தவித மான துக்க நிலைமையிலிருப்பதால் அவர்கள் ராஜ தம்பதிகள் வரவேற்பு வைபவத்திலும் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்திலும் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது நியாயமற்றதாகும். இப்பொழுதுள்ள நிலைமையில் நாங்கள் செய்யக் கூடிய யோசனை யாதெனில் அரச தம்பதிகள் தென் ஆப்பிரிக்காவில் ஆள்வோர்க்கும் ஆளப்படுவோர்க்கும், வெள்ளையர்க்கும் வெள்ளையரல்லாதவர்க்கும், பிரதிநிதித்துவ உரிமையுடையவர்க்கும் இல்லாதவர்க்குமிடையில் நல்லெண்ணமும் சமாதானமும் உண்டாகி தென் ஆப்பிரிக்கா சமுதாயத்திலுள்ள மக்கள் அனைவரும் பாரங்களைத் சரிசமமாகத் தாங்குவது போலவே பரிசுகளையும் சரிசமமாக அனுபவிக்கக் கூடிய காலம் வருமளவும் தங்கள் தென் ஆப்பிரிக்க விஜயத்தை ஒத்திவைக்க வேண்டும் என்று நீங்கள் அவர்கட்கு யோசனை சொல்ல வேண்டும் என்பதே யாகும்."

என் கருத்து :—இந்த விதமான பதில் அனுப்பியதற்காக கேட்டால் இந்தியக் காங்கிரஸ் சபையாரை பாராட்டுகின்றேன். தென் ஆப்பிரிக்காவை உருவாக்குவதில் இந்தியர்களும் சேர்ந்துழைக்கவே செய்தார்கள். அப்படி யிருந்தும் அங்கே அவர்களுடைய சுயமரியாதைக்குப் பங்கம் உண்டாகும்படியாய் சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. தங்கள் சுயமரியாதையை காக்கும் பொருட்டு இந்திய மக்கள் இப்பொழுது போராட்டம் நடத்தி வருகிறார்கள். இந்த நிலைமையில் அரச தம்பதிகளின் விஜயம் அவர்களுடைய மனத்தில் எந்தவிதமான சந்தோஷத்தையும் உண்டாக்க முடியாது. " நிறத் தடை " இல்லாமல் போகும் காலம் வரும்வரையில் இராஜதம்பதிகளின் விஜயம் ஒத்திவைக்கப்படும் என்று நாம் நம்பலாமா?

ஆங்கில தேசிய கீதம் என்று கூறப்படும் பாடலில் கீழ்கண்ட செய்யுள் ஒன்று காணப்படுகிறது :—

> கடவுளே ! நீர் எழுந்து
> எங்கள் பகைவர்களை வீழ்த்தும்.
> அவர்களுடைய ராஜதந்திரத்தைக்
> குழப்பி விடும்.
> அவர்களுடைய அக்கிரமச்
> சூழ்ச்சிகளை தோற்கச் செய்யும்.
> கடவுளே ! உம்மையே நம்பி நிற்கின்றோம்,
> எங்கள் எல்லோரையும் காத்தருளும்.

இந்தச் செய்யுள் யாராலும் சரி என்று வாதிக்க முடியாத வண்ணம் தவறான கருத்துக்கள் உடையது. அந்தக் கருத்துக்கள் இந்தக் காலத்துக்கு ஒவ்வா. அதனால் ராஜாவும் ராணியும் சமீபத்தில் அதை நீக்கி விட்டு கீழ்கண்ட செய்யுளைச் சேர்த்துக் கொள்ளுமாறு கட்டளை யிட்டார்கள்.

> கடவுளே ! இந்த தேச முழுவதும்
> உம்முடைய கருணை மழை பொழியட்டும்.
> உலக முழுவதிலுமுள்ள மக்கள் அனைவரும்
> சகோதரராக ஏக குடும்பமாக
> வாழவேண்டும் என்பதை
> அறியுமாறு செய்தருளும்.

இவ்விதமாகத் தவறான செய்யுளை மாற்றி சகோதரத்துவம் போதிக்கும் செய்யுளைச் சேர்க்கச் செய்த இராஜ தம்பதிகள் இந்தச் சந்தர்ப்பத்தில் தென் ஆப்பிரிக்காவுக்கு விஜயம் செய்யாதிருந்தால் அவர்களுடைய குணத்துக்கு மிகவும் பொருத்தமாகவே இருக்கும்.

புது தில்லி, — 25-10-46 — மோ. க. காந்தி.

## இஸ்லாம் மதவிரோதமான செயல்

அகில இந்திய மஜ்லிஸ் அஹ்ரார் சங்கத்தின் மாஜித் தலைவர் ஷேக் சாகேப் அஸானுதீன் கீழ்க்கண்ட அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி யிருக்கிறார்:—

"மனிதத் தன்மையற்றக் காரியங்கள் கிழக்கு வங்காளத்தில் நடந்துகொண்டிருப்பதாக வரும் செய்தியை எந்த உண்மையான முஸல்மானும் வரவேற்க முடியாது. இந்தச் செயல்கள் புகழத் தகுந்தவையும் அல்ல. இஸ்லாம் மதத்துக்கு ஒத்தவையும் அல்ல. இந்தப் பகுதியிலுள்ள முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் செய்து வரும் செயல்களையும் ஆதி காலிப் மதினவை விட்டு புறப்பட்ட சமயம் சேனாதிபதிக்கு இட்ட உத்தரவுகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அந்த உத்தரவுகளில் காலிப், ஜனங்களைப் பாதுகாக்க வேண்டுமென்றும் முஸ்லிமல்லாத பெண்களின் கற்புக்குப் பங்கம் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் கோவில்களை பய பக்தியுடன் கவனித்து வரவேண்டுமென்றும் வற்புறுத்தியிருக்கிறார். ஆனால் இப்பொழுது கிழக்கு வங்காளத்தில் கொலையும் கொள்ளையும் தீவைத்தலும் பலாத்காரமாகப் பெண்களை மதமாற்றம் செய்து முஸ்லிம்களின் வீடுகளில் அடைத்து வைப்பதும் நடந்து வருகின்றன. இவை எந்த நாகரீக ஜாதியாராலும் பொறுக்க முடியாத வெட்கக்கரமான காரியங்களாகும். கொஞ்ச நாளாக நம்முடைய நாட்டில் சில அரசியல்வாதிகள் தங்களுடைய லட்சியத்தை சித்தியாக்கிக் கொள்ளும் பொருட்டு

ஜனங்களிடம் கோபத் தீயை மூட்டி வந்தார்கள். அவர்களை அடக்கவேண்டிய பொறுப்பைக் கொஞ்சங்கூடக்கருதவில்லை. வங்காளத்திலுள்ளநிலைமைக்கு இதுதான் காரணம். அதனல் என்மனம் முழுவதும் வேதனைப்படுகின்றது. நிச்சயமாக எந்த சர்க்காரும் இந்த நிலைமையை அரைக்கணங்கூட சகித்துக் கொண்டிருக்க முடியாது.

இந்த நிலைமையை மாற்ற சேனையினுடைய பலமும் போலீஸினுடைய பலமும் தந்தால் சரியான பரிகாரமா அல்லது ஜனங்களிடையே பரஸ்பரம் மரியாதையும் நம்பிக்கையும் ஒத்துழைப்பும் ஏற்படுவதுதான் பரிகாரமா என்ற கேள்வி எழுகின்றது. வங்காளத்தில் அமைதியான நிலைமையை உண்டாக்க வேண்டுமானல் பொதுவாக இந்தியாவிலுள்ள முஸ்லிம்களும் சிறப்பாக வங்காளத்திலுள்ள முஸ்லிம்களும் இந்தக் காரியத்தைச் செய்ய முன் வரவேண்டும். வங்காளத்தில் முஸ்லிம்களே பெரும்பான்மையோராக இருந்து வருகிறார்கள். ஆதலால் சிறுபான்மையோரைத் திருப்திப்படுத்துவதும் பயமில்லாமல் வாழும்படிச் செய்வதும் முஸ்லிம் பெரும்பான்மையோர்களுடைய முதற் கடமையாகும்.

ஆனல் துரதிருஷ்டவசமாக வங்காளத்திலுள்ள முஸ்லிம்களின் தலைமைப் பதவி சன்மார்க்கத்தையும் கௌரவத்தையும் துறந்து விட்ட ஒரு வகுப்பாரிடம் போய் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஆதலால் மற்ற முஸ்லிம்கள்தான் இஸ்லாம் மதம் போதிக்கும் பொன் போன்ற தத்துவங்களைக் கடைப்பிடித்துகலகம் நடைபெறும் பிரதேசத்தில் விஷயமறியாமல் அக்கிரமம் செய்துவரும் சகோதரர்களை எவ்வித அபாயத்துக்கும் அஞ்சாமல் நன்னெறிப் படுத்த வேண்டியவராவார்கள். துப்பாக்கிகளையும் மெஷின் பீரங்கிகளையும் தாராளமாக உபயோகிப்பதைக் கொண்டும் தற்பாதுகாப்புக்காக முஸ்லிமல்லாத வீடுகளைக் கோட்டைகள்போல பலப்படுத்துவதைக் கொண்டும் இந்தக் காரியத்தைச் சாதிக்க முடியாது. முதலில் போக்கிரிகளை அடக்கவேண்டும். அதன்பின் ஜனங்களுடைய மனத்தை அறிவு மூலமாக இளக்க வேண்டும். அப்பொழுதுதான் ஜனங்கள் அமைதியாக வாழ்வார்கள். இந்தக் காரியத்தை முஸ்லிம்களே செய்தால்தான் நல்ல பயன் கிடைக்கும்.

வங்காளத்தில் விஷயமறியாமல் பிறர் சொல்லைக் கேட்டுத் தவறாக நடந்து வரும் சகோதரர்களை எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நன்னெறிப்படுத்துவதற்கும் அந்த மாகாணத்தில் சாசுவதமாக அமைதியான நிலைமைக்கு அடிகோலுவதற்கும் அகில இந்திய மஜ்லிஸ் அஹ்ரார் சங்கம் தன்னுடையக் கட்டுப்பாடுள்ள தொண்டர் படைகளை அனுப்பத் தயாராயிருக்கிறது.

இந்தக் காரியம் செய்வதில் அநேக விதமான கஷ்டங்கள் ஏற்படும் என்பது எனக்குத் தெரியும். ஆனல் உண்மையான முஸ்லிம்கள் கடமையை நிறைவேற்றும் விஷயத்தில் துன்பங்களையும் தொல்லைகளையும் ஒருபொழுதும் பொருட்படுத்தியதில்லை. தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்காகத் தற்சமயம் அகில இந்திய மஜ்லிஸின் தலைவராகிய மௌலானு அடலாபுக்காரி, மௌலானு அபுல்கலாம் ஆஸாத், அகில இந்திய ஜமியத் உலாமாவின் தலைவரான மௌலானு ஹுஸேன் அஹமத் மத்னி ஆகியோருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறேன். கடவுள் அருளால் முதல் தொண்டர்படை டில்லியை விட்டு வெகு சீக்கிரத்தில் புறப்பட்டுவிடும் என்று நம்புகின்றேன்.''

மௌலானு சாஹேபும் நான்கு நாட்களுக்கு முன் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டார்.—

"கல்கத்தாவில் நடந்த கோர சம்பவங்களுக்குப் பின்னல் வங்காளத்தில் அந்த மாதிரி வேறெதுவும் நடைபெறாது என்று எண்ணிக் கொண்டிருந்தோம். ஆனல் இப்பொழுது கிழக்கு வங்காளத்தில் நடக்கும் பயங்கரமான சம்பவங்கள் அந்த எண்ணத்தைச் சிதைத்து விட்டன. கொலை கொள்ளை தீ வைத்தல் முதலியவைகளைப் பற்றி உத்யோகஸ்தரல்லாதார் விடுத்திருக்கும் அறிக்கைகளைப் படிக்க பயங்கரமாயிருக்கிறது. சர்க்கார் அறிக்கையானது சம்பவங்கள் நடந்ததை ஒப்புக்கொண்ட போதிலும் உத்தியோகஸ்தரல்லாதார் அறிக்கையில் காணப்படும் எல்லா விபரங்களையும் ஒப்புக்கொள்ளாமலிருக்கிறது. சர்க்கார் கூறும் விபரங்களே போதுமான அளவு வெறுக்கத் தக்கனவாக யிருக்கின்றன. உத்தியோகஸ்தரல்லாதார் கூறும் விபரங்கள் உண்மையாயிருக்குமானல் இதற்குமேல் அக்கிரமங்கள் செய்ய முடியாது என்று கூறவேண்டியதாகும். நாகரீகத்தின் அஸ்திவாரம் பெண்களுடைய கற்பைப் பாதுகாப்பதே யாகும். எவனொருவன் பெண்களின் மானத்துக்குப் பங்கம் தேடுகின்றானே அவன் மிருகமே யாவான். இந்த விஷயத்தில் விசேஷமான பாதுகாப்பைப்பெற சிறு பான்மை யோருக்கு உரிமையுண்டு. சிறு பான்மையோர் பயப்படாமல் இருக்கும்படியாகச் செய்வது பெரும் பான்மையோருடைய கடமையாகும். பெரும் பான்மையோர் சிறு பான்மையோரைக் கொடுமையாக நடத்துவதில் வீரமுமில்லை பெருமையுமில்லை.

அக்கரமங்களைச் செய்வதற்கு மதத்தின்பேரை இழுத்துப் போட்டிருப்பது அதிகமாக வருந்தத்தக்கதாகும். பலாத்காரமாக மதமாற்றம் செய்யப்பட்டதாகவும், பலாத்காரமாக விவாகங்கள் செய்யப்பட்டதாகவும் செய்திகள் வருகின்றன. மதவிஷயத்தில் பலாத்காரத்தை உபயோகிப்பதை எந்த மதமும் ஏற்றுக்கொள்ளாது. அதிலும் இஸ்லாம் மதம் கொஞ்சங்கூட ஏற்றுக்கொள்ளாது. ஆதி காலிப்புக்களுடைய காலத்தில் தான் இஸ்லாம் மதம் அதி பரிசுத்தமாக இருந்தது. அந்தக் காலத்தில் யூதர்கள் கிறிஸ்தவர்கள் போன்ற சிறு பான்மையோர்களை முஸ்லிம்கள் ஸகிப்புத்தன்மையுடன் நடத்தினர்கள். அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பை அளித்தார்கள். அந்தக்காலத்தில் யூதர்கள் கிறிஸ்தவ தேசங்களிலெல்லாம் கொடுமையாகத் துன்புறுத்தப்பட்டார்கள். ஆனல் முஸ்லிம் ஆட்சி நடந்த ஸ்பெயினிலும் துருக்கியிலும் அவர்களுக்குப் பரிபூரணமாகப் பாதுகாப்பு கிடைத்து வந்தது.

இஸ்லாம் மதம் வெகு விரைவாகப் பரவியதைக்கண்டு அதற்குக் காரணம் அது பலாத்காரத்தை உபயோகித்தது தான் என்று இஸ்லாம் மத விரோதிகள் சில சமயங்களில் கூறியதுண்டு. ஆனல் அது பொய் என்பதற்கு மதவிஷயத்தில் எவ்வித நிர்ப்பந்தமும் கூடாது என்று குர்ஆன் கண்டிப்பாக விதித்திருப்பதே போதிய சான்றாகும். ஆதலால் அந்த விதிக்கு மாறாக நடப்பவர்கள் இஸ்லாம் மதத்துக்கும் முஸல்மான்களுக்கும் எவ்வளவு அதிகமான தீங்கைச் செய்ய முடியுமோ அவ்வளவு அதிகமான தீங்கைச் செய்பவர்கள் ஆவார்கள்.

தங்கள் தேசத்தையும் சமூகத்தையும் நேசிக்கும் முஸ்லிம்கள் ஹிந்துக்கள் எல்லோரும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலைமையைக் குறித்துக் காய்தல் உவத்தல் அகற்றி சாவதானமாகச் சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் இரு சமூகத்தாரும் இந்த நாட்டிலேயே வசிக்க வேண்டியவர்கள். எந்த சர்க்காரும் அராஜகத்தையும் குழப்பத்தையும் அதிகக் காலம் சகித்துக்கொண்டிருக்க மாட்டாது. சமூகக் கலகங்கள் நேருமானல் சர்க்கார் போலீசையும் அவசியம் ஏற்பட்டால் இராணுவத்தையும் உபயோகித்து அதை அடக்காமலிருக்க மாட்டார்கள். ஆனல் அப்படிச் செய்வது நோயை

**அன்னியர் ஆள்வதில் நன்மை வந்தாலும் அடிமையின் வாழ்வது நரகம் எந்நாளும். —நாமக்கல் கவிஞர்.**

உள்ளே மறைத்து வைக்குமேயன்றிக் குணப்படுத்த மாட்டாது.

இந்தத் தீமைகளைப் போக்குவதற்கான ஒரே முறை பெரும் பான்மையோர் சிறுபான்மையோருடைய பாதுகாப்புக்கு உத்திரவாதம் கூறுவது மட்டும்தான். போலீஸும் இராணுவமும் வந்து பலவந்தமாகக் குழப்பத்தை அடக்கும் வரையில் காத்திராமல் பெரும்பான்மை சமூகத்திலுள்ள பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் அக்கிரமிகளை எதிர்த்து நின்று சிறுபான்மை சமூகத்தாருடைய உயிரையும் பொருளையும் மானத்தையும் காக்க முற்பட்டால் அந்த நிமிஷமே தேசத்தின் நிலைமை மாறுதல் அடைந்துவிடும். நான் கிழக்கு வங்காளத்திலுள்ள முஸ்லிம் சகோதரர்களுக்கு ஒரு விசேஷ வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். இஸ்லாம் மதமானது அயலாரைச் காப்பதை மதக்கடமையாகக் கூறுகின்றது. நோவாகாளி ஜில்லாவிலும் கிழக்கு வங்காளத்திலுள்ள இதர ஜில்லாக்களிலும் முஸ்லிம்களே மிகப் பெரிய பெரும்பான்மை சமூகத்தாராக இருக்கிறார்கள். அங்குள்ள நல்ல மனிதர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் உயிரை ஈந்தேனும் தங்களுடன் வசிக்கும் மக்களைப் பாதுகாப்போம் என்றும் தங்களைக் கொன்றபிறகே ஹிந்துக்களைக் கொல்ல இடங்கொடுப்போம் என்றும் பகிரங்கமாகப் பறைசாற்றுவார்களாக."

என் கருத்து—இந்த அறிக்கைகளின் மதிப்பு அவற்றை ஆதரிக்கும் முஸ்லிம்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததன்று. கிழக்குவங்காளத்தில் நடைபெறும் இழிவான காரியங்களை இஸ்லாம் மதவிஷயங்களில் இத்துணைப் புகழ்வாய்ந்த முஸ்லிம்கள் கண்டிக்க முன்வந்ததையே பொறுத்திருக்கிறது. அக்கிரமம் செய்தவர்களை யெல்லாம் போக்கிரிகள் என்று கூறுவது தவறு. தவறு செய்தவர்கள் விஷயம் அறிந்தவர்களால் தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்டவர்களே ஆவார்கள். கள்ளங்கபடமற்ற முஸ்லிம்களின் இருதயத்தில் விஷத்தைப் புகுத்தியிருக்கும் போது இவ்விதமான அட்டூழியங்கள் நடைபெற்றதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

இந்தத் தீமையை ஒழிக்க இஸ்லாமியர்களில் நிதான புத்தியுள்ளவர்கள் பகிரங்கமாகக் கண்டிப்பதோடு நின்று விடாமல் உடனே அதற்குத் தக்க காரியங்கள் செய்யவும் வேண்டும். அகில இந்திய மஜ்லிஸின் மாஜித் தலைவர் தீங்கு நடைபெறுமல் செய்வதற்காக தொண்டர்படை அனுப்ப எண்ணியவாறே அனுப்ப முடிந்ததா என்பதை அறிய விரும்புகின்றேன்.

புது தில்லி — 23-10-46 — மோ. க. காந்தி.

## வாரக்கடிதம்

### பலாத்காரத்தால் நடந்த மத மாற்றங்களும் கலியாணங்களும்

இது சம்பந்தமாகக் கேள்வி கேட்டபோது காந்தியடிகள் அக்டோபர் 20ம் தேதி மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியதாவது :—

"இத்தகைய மதமாற்றங்கள் உண்மையான மத மாற்றமாகாது. இந்தமாதிரிக் கடத்திச் சென்று கல்யாணம் செய்வது மறுபடியும் குடும்பத்தில் வந்து சேர்ந்து கொள்வதற்குத் தடையாக இருக்க முடியாது. இதற்கு எவ்வித பரிகாரச் சடங்கும் நடத்தவேண்டிய அவசியமில்லை. அவர்கள் எவ்விதக் குற்றமும் செய்துவிடவில்லை. முஸ்லிம்களுடனும் கிறிஸ்தவர்களுடனும் பலவருஷங்கள் வசித்திருக்கிறேன். அவர்கள் மதவிஷயத்தில் பலாத்காரம் கூடாதென்றே கூறுகிறார்கள். நாமும் முஸ்லிம்களைப் போலவே கடவுள் ஒருவரே என்றுதான் நம்புகிறோம். ஆயினும் குர்ஆனை ஓதும்படி நம்மை நிர்ப்பந்தித்தால் நாம் மறுத்து விடுவோம். உண்மையான முஸ்லிம்கள் கிழக்கு வங்காளத்தில் நடைபெறும் காரியங்களை எதிர்த்து நிற்பார்கள் என்று நம்புகிறேன்.

### பெண்கள் செய்யவேண்டியது யாது?

பெண்கள் தைரியமாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உடைவாள் வைத்துக்கொள்ள விரும்பினல் வைத்துக்கொள்ளலாம். ஆனல் அதிகமான அக்கிரமிகள் வந்துவிட்டால் அப்போது உடைவாள் பிரயோஜனப்படாது. அதனல் அவர்கள் மானபங்கத்துக்கு இடங்கொடாமல் விஷம் சாப்பிட்டுத் தங்களை மாய்த்துக்கொள்ளவேண்டும் என்று யோசனை கூறுகிறேன். அப்படித் தயாராக இருப்பதே அவர்களை வீரமுடையவர்களாகச் செய்துவிடும். யமனுக்குப் பயப்படாத பெண்ணை யாரும் மானபங்கப் படுத்த முடியாது. தற்காப்புக்கு இரண்டு முறைகள் உள. ஒன்று பிறரைக் கொல்லுவதும், தான் கொல்லப்படுவதுமாகும். மற்றொன்று பிறரைக் கொல்லாமல் தான் சாகத் தயாராயிருப்பதாகும். நான் இரண்டாவது வழியையே கற்பிக்க முடியும். ஆனல் எந்த வழியை அனுஷ்டித்தாலும் பயத்தை விட்டு ஒழித்துவிடவேண்டும் என்றே யோசனை கூறுவேன். கோழைத்தனத்தைப் போன்ற பாவம் எதுவும் கிடையாது. ஹிம்சை முறையை அனுஷ்டித்தாலும் கிழக்கு வங்காளத்தில் நடப்பதுபோல நடக்கக் கூடாது. அந்த முறையிலும் தர்ம நீதியை அனுசரித்தே நடக்க வேண்டும்.

### மற்றொரு மானபங்கம்

பெண்கள் மான பங்கத்தைப் போலவே கள்ள வியாபாரமும் ஏழைகளை ஏமாற்றுவதும் அவமானமான காரியங்களே. அந்தக் காரியங்களைச் செய்வதை விட தற்கொலை செய்து கொள்வதே சாலச் சிறந்ததாகும். இந்த அபிப்பிராயம் கூறினல் சிலர்க்கு வருத்தம் உண்டாகலாம். ஆனல் எதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேனே அதைச் சொல்லாமல் மறைத்தால் நான் தவறு செய்தவனவேன்.

### தீபாவளி எதற்கு?

தீபாவளி குறித்து காந்தியடிகள் திங்கட்கிழமை மாலைப் பிராத்தனைக் கூட்டத்துக்கு எழுதிக் கொடுத்த செய்தியாவது :—

வங்காளத்தில் ஆயிரக் கணக்கான குடும்பங்கள் பாழடைந்து விட்டன. நாட்டில் உணவும் உடையுமின்றி ஜனங்கள் வாடி வதங்குகின்றனர். அத்துடன் நாம் சகோதரர்கள் நமக்குள் சண்டை போட்டுக் கொண்டுமிருக்கிறோம். இந்த நிலைமையில் நாம் செய்ய வேண்டியதுயாது? நம்முடைய மதத்திலுள்ள மாசைநீக்க வேண்டும். இயன்ற அளவு உணவை மீதிப்படுத்தவும் இயன்ற அளவு நூல் நூற்கவும் செய்ய வேண்டும். உணவை மிச்சப்படுத்துவதும் உணவை உண்டாக்குவது போல் நல்லதே. நூல் நூற்பது ஏழைமக்களுக்கு உடை அளிக்கும். உண்மையாய் நடப்பவர் உலகத்தை ஒரு படி உயர்த்திவிடுகின்றார். ஆகவே மகிழ்ச்சிக் கொண்டாண்டத்துக்கு இது சமயமன்று. நான் கூறிய விஷயங்களே நாம் செய்ய வேண்டியவைகளாகும்."

### புது வருஷப்பிறப்புச் செய்தி

காந்தியடிகள் வெள்ளிக்கிழமை புது வருஷப்பிறப்பன்று கீழ்கண்ட உபதேச மொழிகள் கூறினர் :—

"இந்தியா உள்பட உலகமுழுவதும் நெருக்கடியான நிலைமை உண்டாயிருக்கிறது. அதைச் சமாளிக்க நமக்கு வேண்டியது யாது? சன்மார்க்க நடைக்கு முதன் முதலாக வேண்டியது அஞ்சாமைதான் என்று பகவத்கீதை போதிக்கின்றது. புது வருஷப்

பிறப்பன்று நல்ல விரதம் மேற்கொள்வது நமது நாட்டு வழக்கம். ஆதலால் இன்று நீங்கள் அச்சத்தைத் துறந்துவிடத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். அஞ்சாமை என்னும் அறம் கை கூடாவிட்டால் மற்ற அறங்கள் எல்லாம் வெறும் மண்ணே யாகும். அஞ்சாமை கைகூடாவிட்டால் உண்மையும் அஹிம்சையும் கைகூடமாட்டா.

அஞ்சாமை என்றால் ஆணவம் என்று அர்த்தமாகாது. ஆணவமும் அச்சத்தின் அறிகுறியே யாகும். மனத்தில் சாந்தமும் அமைதியும் உள்ளவரே அஞ்சாமல் இருக்க முடியும். அத்தகைய சாந்தி உண்டாக வேண்டுமானால் அதற்குக் கடவுளிடம் அசையாத நம்பிக்கை இன்றியமையாத தாகும். கடவுளிடமே அடைக்கலம் புகுபவனே அச்சத்தை அறியாதவன்.''

**முஸ்லீம் லீக் மந்திரிகள்**

சனிக்கிழமை மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியடிகள் கூறியதாவது :—

''முஸ்லிம் லீக் மெம்பர்கள் இடைக்கால மந்திரி சபையில் வந்திருக்கிறார்கள். மந்திரி சபையை வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்ற உறுதியுடன்தான் வந்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன். இந்தத் தேசத்தின் சர்க்கார் இந்த 14 பேரிடமே வந்து சேர்ந்திருக்கிறது. அவர்கள் உணவும் உடையும் தேடிக் கொடுக்கவும், கல்வி தரவும், நாட்டில் அமைதி நிலவும்படி செய்யவும் வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்தே வேலை செய்வார்கள் என்றும் அவர்கள் எல்லாவற்றையும் பகிரங்க மாகவே செய்வார்கள் என்றும் தயவு தாட்சண்யம் ஆகியவை அறவே காணப்படா என்றும் நம்புவோமாக !''

புது தில்லி — 27-10-46 — பியாரேலால்.

## கைராட்டினமும், அணுகுண்டும்.

அமெரிக்காவிலுள்ள ''நியுயார்க் போஸ்ட்'' என்னும் பத்திரிகையின் நிருபராகிய திரு. ஆண்ட்ரூ ப்ரீமன், காந்திஜியிடம் கைராட்டினத்தில் நூல் நூற்கக் கற்றுக்கொண்டு வந்தார். அவர் கைராட்டினமானது பண்பாட்டை அபிவிர்த்தி செய்வதற்கும் நோயைக் குணப்படுத்துவதற்கும் உபயோகமானது என்று எண்ணுகிறார். மேனாடுகள் எந்த ஆத்மீக நோயால் வருந்துகிறதோ அந்த நோய்க்குக் கைராட்டினமே தக்க மருந்து என்று நம்புகிறார்.

அவர் காந்தியடிகளிடம் ''கைராட்டின மானது அமரிக்க ஜனங்களுக்கு ஏதேனும் உபதேசம் செய்யுமா ? அணு குண்டுக்குப் பதிலான ஆயுதமாகச் சேவை செய்ய முடியுமா ?'' என்று கேட்டார்.

காந்தியடிகள்:—ஆம் அமெரிக்கருக்கு மட்டுமின்றி உலகமனைத்துக்கும் கூட உபதேசம் செய்யும். ஆனால் இந்தியா தேசம் அதைப் பரிபூரணமாக ஏற்றுக்கொண்ட பிறகுதான் அது சாத்தியமாகும். இந்தியா இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குக் காரணம் கைராட்டினத்தின் குற்றமன்று. கைராட்டினம் தான் இந்தியாவையும் உலகத்தையும் காப்பாற்ற முடியும் என்பதில் எனக்கு எள்ளளவு கூடச் சந்தேகம் கிடையாது. இந்தியா மெஷினுக்கு அடிமையாகுமானால் அப்போது கடவுள்தான் உலகத்தைக் காக்க வேண்டும் ! இப்பொழுது சமாதான மகாநாடு நடக்கும் போதே சமாதான பங்கம் உண்டாவதைக் கண் முன்னாலேயே காண்கிறோம் அல்லவா ?''

திரு. ப்ரீமென் :—ஆம், இந்தியாதான் வழி காட்ட வேண்டும். ஆனால் இந்தியாவின் நிலைமை குழப்பமாக அல்லவோ இருந்து வருகிறது ?

கைராட்டினத்தை எந்த நாடேனும் கைக்கொள்ள முடியுமானால் அது இந்தியா தான். ஆனால் அப்படி அது செய்யும் என்று எண்ணுகிறீர்களா ?''

காந்தியடிகள் :—கைக்கொண்டுதான் வருகிறது. ஆனால் மிகவும் மெதுவாகவே. கதர்தான் சுதந்திர உடை என்று பண்டித நேரு கூறுகிறார். ஆனால் பாப்பர்களும் பைத்தியக்காரர்களும் மட்டுமே அதைக் கைக்கொண்டால் அது சுதந்திர உடை ஆவதெப்படி ? மனிதனால் சாதிக்கக் கூடிய விஷயங்கள் பல உள. ஆனால் கடவுளால் அனைத்தும் சாதிக்க முடியும். கடவுள் என்று ஒரு ஜீவ வஸ்து இல்லையெனில் கைராட்டினத்துக்கு இடமே கிடையாது.

திரு. ப்ரீமென் :—நூல் நூற்பவர்களைப் பைத்தியக்காரராக இங்கே எண்ணக் காணோமே !

காந்தியடிகள் :—ஆம். அமெரிக்கர்கள் சொல்லக் கூடும் என்று தான் சொன்னேன். இங்கும் சிலர் என்னை லட்சிய வாதி என்றே கூறுகிறார்கள்.

திரு. ப்ரீமென் :—அனேக அமெரிக்கர்கள் நூல் நூற்பவரைப் பைத்தியக்காரர் என்று கூறியபோதிலும் அங்கே சிலர் இதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து வருகிறார்கள். நாகரீகத்தை எப்படிக் காப்பாற்றுவது ? வாழ்வை எளியதாக்கவேண்டும்.

காந்தியடிகள் :—ஆம். அந்தமாதிரிச் செய்தால்தான் மனிதன் மனிதனாக இருக்கமுடியும். ரஸ்கின் எழுதிய ''இறுதி வரை'' என்னும் நூல் என்ன குறிக்குமோ அதையே நான் உறுதியாக நம்புகிறேன். அந்த நூல்தான் என்னுடைய வாழ்வை வேறுவிதமான வழியில் திருப்பிவிட்டதாகும். உலகத்தில் எல்லோர்க்கும் சரிசமமான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். அந்தவிதம் அளித்தால் சகல மக்களும் ஆத்ம வளர்ச்சி அடைய முடியும். அதைத்தான் கைராட்டினம் அறிவிக்கின்றது.

திரு. ப்ரீமென் :—அப்படியானால் அமெரிக்கர்கள் கைராட்டினத்தைக் கைக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறீர்களா ?''

காந்தியடிகள் :—ஆம். ஆனால் இங்கே வேரூன்று முன்னர் வேறெங்கேனும கைக்கொள்ளப்படுமா என்பது சந்தேகம். இந்தியா கைக்கொண்டு விட்டால் பிறகு அதைப்பற்றி உலகத்துக்குக் கூறவேண்டிய அவசியமே யில்லை. அது தானாகவே அதைக் கைக்கொண்டுவிடும். இப்போது மேனாட்டு மெஷின் மோகம் இந்தியாவில் அதிகப்பட்டு வருவதால் அதைத் தடுக்க முடியுமானால் அது ஒரு பெரிய அற்புதமாகவே இருக்கும். ஆனால் அது நடைபெறுமோ என்னவோ? சகோதரர்கள் சண்டை போட்டு வருவதைப் பாருங்கள்.

திரு. ப்ரீமென் :—ஆனால் நீங்கள் நம்பிக்கையை இழந்து விட வில்லையே.

காந்தி யடிகள் :—கடவுளிடம் நம்பிக்கை இருக்கும் வரை எப்படி இழக்க முடியும் ? மேனாடுகள கிறிஸ்துவை வழி படுவதாகக் கூறுகின்றன. வழிபட்டால் இந்த யுத்தம் ஏற்பட்டிருக்குமா ? இந்தியாவில் மடமையும் மூட வழக்கங்களும் இருந்தாலும் கடவுள் நம்பிக்கையும் மத உணர்ச்சியும் இருக்கவே செய்கின்றன.

திரு. ப்ரீமென் :—ஆனால் கிறிஸ்துவ மதம் கிறிஸ்துவைத் துறந்து விட்டது போலவே இஸ்லாமும் முகமது நபியைத் துறந்து விட்டதா ?

காந்தியடிகள் :—அவர் இப்பொழுது வந்தால் முஸ்லிம்களில் பலரை ஒதுக்கிவிட்டு என்னையே உண்மையான முஸ்லிமாக ஏற்றுக் கொள்வார். அப்படியே தான் கிறிஸ்துவும்.

புது தில்லி, — 30-10-46 — மோ. க. காந்தி.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை